அபூர்வமான அனுபவம் அடைந்தேன்

நெஞ்சார ஒன்று சொல்கிறேன். சென்ற ஞாயிறு (4-5-08) நடந்த ஒரு நிகழ்வு, என்வாழ்வில் நேர்ந்த மிக அபூர்வமான தருணங்களில் ஒன்று. நெஞ்சு இனிக்க அந்த நாள் என்னில் பதிந்தது. ஒரு பேப்பர் இல் அரசியல், ஆய்வுக் கட்டுரைகள் எழுதுகிற வி.சபேசன் (ஜேர்மனி) அவர்கள் கலைநிதியை வதுவை புரிந்த அந்தத் தருணத்தையே மிக்க அபூர்வமான தருணம் என நான் குறிப்பிட்டேன்.

சனிக்கிழமை (3-5-08) காலையில் நாதன் அவர்களின் மகிழ்வுந்தில், கோபி, பார்த்தி, இளங்கோ, நாதன், நான் என ஒரு பேப்பர் காரன்கள் புறப்பட்டோம். மணிவாசகனை விட்டுப் போவது வருத்தமாக இருந்தது.

பிரகாசமான காலை வெய்யிலில் தெளிவான தார்ப் பாதையில் பயணம் குதூகலத்துடன் அமைந்தது. அரசியல், சினிமா என்று அளவளாவியதில் எட்டுமணிப் பயணம் சோர்வைத் தரவில்லை என்று சொல்லக் கூடாது. இன்பகரமாய் இருந்தது. அப்படித்தான் சொல்ல வேண்டும்.

டோற்முண்டில் சின்ன ஆச்சரியம் ஒன்று. ஒரு பேப்பர் இல் அச்சுப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் குமார் அவர்களை அவர் நடாத்தும் தமிழ்ப்பாடசாலையில் சந்தித்தோம். மஞ்சள் வெய்யில் எறிக்கிற மாலைப் பொழுதுக்கு குதூகலமாக இருந்தார் குமார். ஒரு அப்பாவியாக இருப்பார் என நான் எண்ணினால் 'அட பாவி' என்று சொல்ல வைத்தார். ஒரு சின்ன எளிமையான நூலகம், கரும்பலகைகளுடன் கூடிய வகுப்பறைகள், மேலாக ஈழத்துத் தமிழ் அறிஞர்களின் புகைப்படங்கள் அவர்கள் பற்றிய விபரங்களுடன் சுவர் நீள இருந்தன. அதுவே எனக்கு மெச்சத்தக்க ஒரு விசயம் என்றாயிற்று. அவர் கைபற்றி முகமன் கூறிப் புறப்பட்டு 'ஒபகவுசன்' வந்தோம்.

அதுதான் சபேசனின் வதிவிடம். அங்குதான் அடுத்தநாள் ஞாயிறு சபேசனின் திருமணம் நடந்தது. அதுதான் ஜேர்மனியில் நடைபெறுகின்ற முதலாவது தமிழ் நெறியில் அமைந்த மணவிழா. அதில் அடியேனும் பங்கேற்றேன் என்பது போக மணவிழாவை ஒருங்கிணைந்து நடாத்துபவர்களில் ஒருவனாக இருந்தேன் என்பதுதான் மெத்த மகிழ்ச்சிக்குரிய விசயம். அதாவது, ஒருவிதத்தில் அய்யராயும் அங்கு நான் இருந்தேன்.

இம்மணவிழா இவ்வாறுதான் நிகழ்ந்தது. மணமகன் வந்து ஐந்து நிமிடத்தில் மணமகள் வருகிறார். இல்லத்தரசிகள் இருவர் குத்துவிளக்கு ஏற்றிய பின் மணமக்கள் திருமண உறுதிமொழி எடுக்கின்றனர். பின் மாலை மாற்றப்படுகின்றது. மங்கலநாண் வாழ்த்திற்காக அவையோரிடம் அனுப்பப்படுகிறது.

மங்கலநாண் வந்து சேர்ந்த பின் இருவரும் ஒருவர் கழுத்தில் ஒருவர் மங்கலநாண் அணிவிக்கின்றனர். அவ்வமயம் அவையோர் மலர்தூவி வாழ்த்துகின்றனர். பின் மணமக்கள் தம் பெற்றோரிடம் வாழ்த்து வாங்கி நற்கருமம் ஆற்றுகின்றனர். பொதுவான வாழ்த்துரைகள் முடிய மச்சச்சாப்பாடும் உள்ள மதிய விருந்து காத்திருந்தது.

மணவிழா இனிது நிறைவேற நாம் மகிழ்வுந்தில் ஏறி னோம். மதிய வெய்யிலில் இலண்டனை நோக்கிய எமது பயணம் தொடங்கிற்று.

மணவிழா பற்றிய சுருக்கக் குறிப்பு வரைக என்றால், இவ்வாறு தான் எழுத முடியும்.

ஆனால், அந்த மணவிழா பற்றிச் சொல்ல ஆயிரம் உண்டு. குறிப்பாக சபேசன் அவர்களின் துணிச்சலின் தொடர்வை முன்னெடுக்கும் முனைப்பை வாழ்த்த வேண்டும், வணங்க வேண்டும், போற்ற வேண்டும், புகழ வேண்டும்.

எதற்கும் ஓம் என்று ஒத்துழைத்த ஆரணங்கு கலைநிதியை சபேசனிலும் ஒருபடி மேலே போய்ப் போற்ற வேண்டும். சபேசனுக்கு இதில் ஓர் அன்பு கூறல், ஆணாதிக்கத்தின் சிறு அடையாளமும் இதில் படர்ந்து விடாமல் மிக்க கவனமாகப் பார்க்க வேண்டும?

தமிழ் மறையான திருக்குறளினாலேயே இம்மணவிழா நிகழ்ந்தது. திருக்குறளில் எத்துணை ஆற்றல் வாய்ந்த வரிகள் உள்ளன என்பது மணவிழாவின் முழுமையில் தெரிந்தது. இம்மணவிழாவில் எந்தவொரு நிகழ்வுக்கும் ஏதோ ஒரு குறள் பொருந்திப் போய்க் கொண்டிருந்தது. வள்ளுவர் வல்லமை வாய்ந்தவரா? அல்லது நம் தமிழ்மொழி அத்தனை தரம் மிக்கதா?

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

இரண்டும் தான். இரண்டுமே அல்லத்தான். ஏன் சொல்லுகிறேன் என்றால், பண்பாடு மிக்க நம் தமிழினம் தான் மொழியை இவ்வளவு வளம் பெறச் செய்தது. வள்ளுவரைத் தோன்றச் செய்தது. சிந்தனா வாதியாக்கியது. அற்புதமான பண்பாடு மிகுந்த தமிழ்ச் சமூகம் தான் வள்ளுவரை உருவாக்கியது. அதனால் தான் அப்படிச் சொன்னேன்.

இம்மணவிழாவில் இன்னொன்று குறிப்பிடத்தகுந்தது. திருமண உறுதிமொழி எடுத்தலிலும், மங்கலநாண்கள் பற்றிய பிரகடனத்திலும் 'சரிநிகர் சமானமாக' மண மகன், மணமகள் இருந்தனர். மங்கலநாண்களும் சம அந்தஸ்தாக இருந்தது. கூர்ந்து கவனித்துச் செய்த நற் காரியம் இது. வாழ்விலும் அது வழிவரும். நம்புகிறேன் நான்.

மணவிழா நிறைவுறுகிற தருணம் இன்னொரு காரியம் இருக்கிறது. சாதாரண கலியாணச்சடங்குகளில் அது, பிராமணர்களுக்கு வழங்குகிற தானமாக நிறைவு பெற்று விடும். ஆனால், இங்கு அது அவ்வாறு நிறை வடைந்ததல்ல. மணமகனும், மணமகளும் மணம் முடிந்ததும் செய்யும் நற்பணி, இவ்வாறு அமைந்தது. தாயகம் காப்போரின் தாள் பணிந்து தாயகவிடுதலைக்கு உதவியாக பொற்குவை ஒன்றைக் கொடுத்தார்கள்.

தமிழ்நெறி முறையில் அமைந்த இத்தகைய மணவிழாக்கள் பெரியாரின் மீள் உருவாக்கத்துடன் 1950 களில் தமிழ்நாட்டில் நடைபெற்றது. 1967 இல் தி.மு.க தமிழ் நாட்டை ஆளத்தொடங்கிய போது பெரியாரின் வழிகாட்டலுடன் அறிஞர் அண்ணா சட்டபூர்வமாகவே இதனை அங்கீகரித்தார். அதுமாத்திரமன்றி, இவ்வாறான சீர்திருத்தத் திருமணங்களுக்கு தமிழ்நாடு அரசு நிதியுதவியும் வழங்கியது.

தமிழீழத்தில் போராளிகளுக்கிடையிலான மணவிழாக் கள் இந்நெறிமுறையிலேயே அமைந்தன. இப்போதுபுலம் பெயர் நாடுகளில் இது தொடர்வதற்கு கலைநிதி, சபேசன் இருவரும் முன்முனைப்பாளர்கள் ஆகினர் என்பது கூடுதல் மகிழ்வு.

தோழர்களே நுமக்கு நாம் தரத்தக்கது இவையே, இவை கூட கவிஞர் வில்வரத்தினத்திடம் உவந்து பெற்றது.

'வீறு கொள்
ஓர்மமும் மூச்சும் உமக்குள்ளும் எழுக
விடுதலைப் பறவையின் தொலைநோக்கும்
வீச்சும் உள்வாங்குக விறலோய்'.

அறிவியல் தகவல்கள்

சி.மாசிலாமணி
(ஒரு பேப்பருக்காக)

மொழியும் அதன் ஆரம்பமும்

உள்ளத்தின் உருவாக்கம் முகத்தில் பிரதிபலித்து, அதுவே ஒலியாகி திரும்பத் திரும்ப ஒலிக்கப்பட்டு தொடர் சொற்களாகி அவற்றின் அர்த்தங்கள் உணரப்பட்டு பேச்சாகவும், காலப்போக்கில் எழுத்தாகவும் பேச்சாகவும் பரிணமித்து கருத்துப் பரிமாற்றச் சாதனமாக செயற்பட்டு மக்கள் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்தி வரும் அரிய கலையே மொழி.

மொழியின் ஆரம்பம் பற்றி அறிவது ஒரு நீண்டகால அவா. மொழி பேச்சுக்கு மட்டும் பயன்பட்ட காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் தடயங்கள் ஏதும் எம்மிடம் இல்லை. ஆரம்ப நிலையிலும் எந்த மொழியும் இல்லை. அத னால் மொழியியலாளர் வேறு வழிவகைகளை மொழியின் ஆரம்பம் பற்றி அறிவதற்கு கையாள வேண்டி உள்ளது.

சொற்களை உச்சரிப்பது வேறு ஒரு மொழியைப் பேசுவது வேறு. வாயால் சொல் வந்தால் மட்டும் போதும், கிளியும் பேசும். சிங்கப்பூரில் ஒரு கிளி 3 மொழி பேசியதை பலர் கேட்டிருப்பீர்கள். ஆனால் புரிந்து பேசுவதில்லை. ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு சொல்லை என்றாலும் தன் காதாற் கிரகிக்க முடியாத முழுச் செவிட்டு மனிதர்கள் சைகைகள் மூலமாக எவ்வளவு தூரத்திற்கு தமது கருத்தை எம்முடன் பரிமாறுகிறார்கள். ஆகையால் மொழிக்கு வாய் உச்சரிப்பு மட்டும் போதாது மூளையின் செயற்பாடும் தேவை. மனிதனுக்கு மட்டும்தான் அந்த ஆற்றல் உண்டு. மற்றைய உயிரினம் எதுவுக்குமே இல்லை.

டொல்பின் என்னும் கடற்பிராணி, மனிதக் குரங்குகள், குரங்குகள் இவை மத்தியிலும் பரிமாற்றம் அவதானிக்கப் பட்டுள்ளது. பல சொற்களை அறியும் ஆற்றல் அவதானிக்கப் பட்டுள்ளது. பிள்ளை அழுதால் தாய் பிள்ளையைத் தூக்கச் செல்கின்றதோ என்று பார்க்கும் கரிசனைப் பார்வைகூட குரங்குகள் மத்தியில் அவதானிக்கப் பட்டுள்ளது. ஆனால் மொழி என்று சொல்லத் தேவையான சொற்தொடர் உபயோக ஆற்றல் அவதானிக்கப் படவில்லை.

30 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட இரண்டு கால் பரிணாமத்திற்கும் கடந்த ஒரு இலட்சம் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ஆய்வுப் பொருள்களும் கல் ஆயுதங்களும் பெரிய வித்தியாசம் கொண்டவையாக இல்லை.

இந்தக் கால கட்டத்துள்தான் பீகிங் மனிதன், நியண்டதல் மனிதன் ஆகியோர் அடங்குகின்றனர். ஒரு இலட்சம் ஆண்டுக்கும் ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கும் இடையில்தான் பாரிய அபிவிருத்தி காணப்பட்டு ஐம்பதினா யிரம் ஆண்டுகளிலிருந்து இன்றைய மனிதப் பண்புகள் ஆபிரிக்காவின் பல பாகங்களிலும் அவதானிக்கப் பட்டுள்ளது. இதன் பின்புதான் மனித இனம் உலகம் முழவதும் பரவியது.

உலகம் முழவதும் உள்ள மொழிகளுக்கு எல்லாம் முதல் மொழி ஒன்று தானோ அல்லது பிராந்தியத்திற்கு பிராந்தியம் தனித் தனியாக வளர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளோ என்னும் கேள்விக்கு சரியான கருத்து ஒற்றுமை ஆய்வாளர் மத்தியில் இன்னும் இல்லை.

ஐம்பதினாயிரம் ஆண்டளவிற்தான் மனிதமூளை மாற்றம் பெற்று மொழியைக் கையாள மனிதன் ஆரம்பித்தான் என்ற கூற்றில் காணப்படும் அளவு ஒற்றுமைகூட ஒரு மொழியிலிருந்துதான் எல்லா மொழிகளும் உருவாகின என்ற கூற்றைப் பொறுத்த மட்டில் இன்னும் இல்லை.

விடை கிடைக்கும் நாள் அண்மிக்கின்றது. அதற்கிடையில் ஆதிசிவன் பெற்றுவிட்டான் ஒரு வேதியன் நிறை மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான் என்று பாட ஆரம்பித்து விடாதீர்கள்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.

ஒரு பேப்பர்

SRI ATHIPARASAKTHI ASTROLOGY CENTRE

Specialist in all kinds of Astrology
Face Reading & Palm Reading

1ST FLOOR 49 HIGH STREET
EAST HAM, LONDON, E6 1SH
(NEAR PRIMARK STORE)
Opening Hours: 10a.m – 7 p.m
7 Days a week

Call: **S.P. SRIRAM GURJI**
AADIVASI MUKKIYA

இந்தியாவில் ஸ்ரிகாகுளம் மாவட்டம் அருகில் உள்ள அதி பயங்கர வனத்தில் மூன்று குருமார்களிடத்தில் 5 வயது முதல் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவரத்தி ஆகியவைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள். பல நாடுகளுக்குச் சென்று வியாபார நோக்கு இல்லாமல் சேவை மனப்பான்மையுடன் மக்களுடைய பிரச்சனை களைத் துார்த்து வருகின்றார்.

உத்தியோக பிரச்சினை, குடும்ப உள் விவகாரம், நிதி நிலை விவகாரம், கோர்ட் விவகாரம், எதிரிகள் தொல்லை, விசா பிரச்சினை, வியாபார முன்னேற்ற மின்னை, பில்லி சூனியம், மற்றும் எல்லாவித பிரச்சனைகளையும், மூலிகை மருந்து மூலமும், ஆயுர்வேத மருந்து மூலமும், டாக்டர்கள் குணப் படுத்த முடியாத வியாதிகளையும், மனப்போராட்டங் களைப் போக்கச் செய்வார்.

இவர் பல நாடுகளுக்குச் சுற்றி இலண்டனுக்கு வந்துள்ளார். சில காலமே இங்கு வசிப்பார். அதற்குள் நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு உங்கள் பிரச்சனைகளைக் கூறிப் பரிகாரம் தேடுங்கள்.

திருமண பொருத்தம் பார்த்துக் குறிப்பு கொடுக்கப்படும்.

Mob: **07918 808 855**
07506 933 790

S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA
Spoken languages: Tamil, Telugu, Hindi, kannada & English.